[1981 மே 11]

திரும்பவும் ரிப்பேர் செய்யவேண்டுமென்று சொல்லிருக்கிறோம். முடிந்துவிட்டதாக இங்கே குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பணி சரியாக முடிவுறவில்லை என்று உறுப்பினரவர்கள் கருதுவார்களேயானால் அதையெடுத்துச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. மற்றபடி வேறு ஏதாவது அங்கே செய்ய வேண்டுமென்று உங்களுடைய கருத்து ஏதாவது இருக்குமேயானால் தனியாக எழுதிக் கொடுப்பீர்களே யானால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 1061 மற்றும் 1062 ஆகியவை மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள 'குரும்பர்' எனப்படும் ஜாதி

*வினா எண். 1063 திரு. ம. சின்னராஜ் (திரு. கே. குப்புசாமி மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'குரும்பர்' எனப்படும் ஜாதி தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் ''மலைவாசிகள்'' என்றும் சில மாவட்டங்களில் ''பிற்படுத்தப்பட்டோர்'' என்றும் இருக்கும் முரண்பாட்டைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ''குரும்பாஸ்'' இனம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மற்றும் ''குருமான்ஸ்'' தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் என்று இந்திய அரசியலமைப்புச் சட்ட (பழங்குடியினர்) ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையினை குடியரசுத் தலைவர் தான் வெளியிட முடியும். இம்மாநில அரசு வெளியிட்டுள்ள பிற்பட்டோர் பட்டியலில் ''குரும்பா'' இனம் தமிழ்நாடு முழுவதும் பிற்பட்டோர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவுமின்றி மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலும் இக் 'குரும்பா' இனம் இடம் பெற்றுள்ளது. ''குரும்பர்'' இனத்தவரும் 'குருமான்ஸ்' இனத்தவரும் ஒரு இனத்தவரே என்று அறிவிக்க வேண்டுகோள்கள் வந்ததன்பேரில் இந்த இரண்டு இனங்களைப் பற்றியும் ஓர் ஆய்வு நடத்தி கருத்துரு ஒன்றினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். சின்னராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த பதிலிலிருந்து ஏற்கனவே மத்திய அரசாங்கத்தினுடைய பட்டியலில் இரண்டு இனங்களுமே ஆதிவாசிகள் இனம் என்று குறிப்பிடப்பட்டதாகத் தெரிகிறது. எனவே, அதைப்பற்றி ஆய்வுகூடத் தேவை இல்லை. குருமான்ஸ், குரும்பாஸ் இரண்டுமே ஆதிவாசிகள் இனம் என்ற ஆதாரங்களையும் அவர்கள் மாநாடுகள் மூலமாகவும், கோரிக்கைகள் மூலமாகவும் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, மேலும் தொடர்ந்து ஆய்வு செய்யாமல்,

அந்த இரண்டு பெயருடைய இனமும் ஆதிவாசிகள், மலைவாசிகள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் உடனடியாக அதை ஆதிவாசிகள் பட்டியலில், மலைவாசிகள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாக நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு கோவை மாவட்டத்திலே நடந்த குரும்பர் மாநாட்டுக்கு நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சென்றிருந்தபொழுது, அத்தகைய கோரிக்கைகள் எங்களுக்கு அளிக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் தான் தற்போது இந்த அரசைப் பொறுத்தவரையிலே, இந்த ஆய்வைச் செய்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பி இருக்கிறார். அதில் இந்த இரு இனத்தவரும் ஓர் இனம் தான் என்று அறியப்பட்டால், அந்த முடிவு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, பாராளுமன்றத்திலே பழங்குடியினர் பட்டியலைத் திருத்த சட்ட முன்வடிவு கொண்டு வரும்போது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. கே. குப்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக் குழுவினுடைய அறிக்கை எப்பொழுது வரும்? வந்தவுடனே விரைந்து அந்த நடவடிக்கை மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அது முடிக்கப்படும்.

திரு. எம். சின்னராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவின் அறிக்கையைப் பெற்று, அதை இணைப்பதற்கு ஓரளவு காலதாமதம் ஆகும். ஆகவே, அதுவரையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அவர்களுக்கென்று வாதாட சட்டமன்றத்தில் கூட ஒரு உறுப்பினர் இல்லை; அந்த அளவு இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஓரளவு பதவிகளிலும், இதர கல்வி நிலையங்களிலும் இட ஒதுக்கீட்டில் முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னதாக, அத்தகைய முன்னுரிமை அளிப்பது என்பது இயலாத ஒன்றாகும்.